# புனித மாசில்லாக் குழந்தைகள்

## டிசம்பர் 28

### திருப்பலி முன்னுரை

"சின்னஞ்சிறு கோள்களெல்லாம்

சூரியனுக்கு மிக அருகில் இருப்பது போல

சின்னஞ்சிறு குழந்தைகள் எல்லாம்

கடவுளுக்கு மிக அருகிலேயே இருக்கிறார்கள்" என்றார் ரிச்சர்ட்.

மாசற்ற செம்மறி மாண்புடன் வாழ்வதற்கு எண்ணிலடங்கா மழலையரின் மாசற்ற இரத்தம் சிந்தப்பட்ட விழாவை இன்று திருஅவை கொண்டாடுகிறது. பிறந்த குழந்தை இயேசுவை எப்படியாவது கொல்ல வேண்டும் என்ற சதிக்கு இரையானவர்களுக்குக் கரம் குவித்து நன்றி கூறும் நாள். உலகின் நஞ்சிலிருந்து மீட்கப்பட்டு கிறிஸ்துவின் முதல் மறைசாட்சியர் என்ற மங்கள புகழுடன் என்றும் வாழும் இவர்களின் புகழ் இன்றும் இறவாமல் உள்ளது. அதிகார வர்க்கமும், ஆணவமும் அன்று மாசற்ற இரத்தத்தைச் சிந்தி கொல்லச் செய்தது. ஏரோது மன்னனின் பயம், பொறாமை, ஆணவம் இவற்றுக்கு இரையாக பல பச்சிளங்குழந்தைகள் பலியாகின. மற்ற மறைசாட்சிகள் இயேசுவிற்காக இறந்தனர். ஆனால் இக்குழந்தைகளோ இயேசுவிற்குப் பதிலாய் மடிகின்றனர்.

நற்செய்தியில் பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளை இயேசுவிடம் ஆசி பெற அழைத்துவரும்போது, அவர்களை இயேசுவின் சீடர்கள் தடுக்கிறார்கள். அப்போது இயேசு அவர்களைப் பார்த்துக் "குழந்தைகளைத் தடுக்காதீர்கள், அவர்களை என்னிடம் வரவிடுங்கள். ஏனெனில் இறையாட்சி இத்தகையோருக்கே உரியது" என்கிறார். மேலும் சீடர்கள் தங்களுக்குள் யார் பெரியவர்? என்று சண்டை போட்டபோது, இயேசு அவர்கள் நடுவே ஒரு குழந்தையை நிறுத்தி,

“நீங்கள் மனந்திரும்பி சிறுபிள்ளைகள் போல் ஆகாவிட்டால் விண்ணரசில் புகமாட்டீர்கள்” என்கிறார்.

ஒரு குழந்தையை பத்திரமாய் பார்த்து வளர்ப்பது தாயின் கடமை. அதே போல ஒரு குழந்தையை குறையில்லாமல், குற்றமில்லாமல் வளர்ப்பது தந்தையின் கடமை. ஒரு மாணவனை சிற்பமாய் செதுக்கி எடுப்பது ஆசிரியரின் கடமை என்பதற்கேற்ப குழந்தையின் குணநலன்களை வடிவமைப்பதில் பள்ளி ஆசிரியர்கள், ஊடகங்கள் மற்றும் சமூகம் பெரும்பங்கு வகிக்கிறது.

இன்றைய குழந்தைகளிடம் வெகுளித்தனம் மிச்சம் இல்லை. கார்ட்டூன்களில் ஆரம்பித்து வீடியோ கேம்ஸ், திரைப்படங்கள், தொலைக்காட்சி, இன்டெர்நெட், மொபைல்ஃபோன் உள்ளிட்டவற்றால் அவர்களின் வெகுளித்தனம், குழந்தைத்தனம், அறியாத்தனம், அப்பாவித்தனம் ஆகியன தொலைந்தே போய்விட்டது. இதனை மீட்டெடுப்பது நம் ஒவ்வொருவரின் கடமை ஆகும்.

மாசில்லாக் குழந்தைகள் விழாவைக் கொண்டாடும் இவ்வேளையில் நாமும் குழந்தை உள்ளம் கொண்டு வாழுவோம். குழந்தைகளை மனிதர்களாக மனித நேயத்தோடு மதித்து பழகுவோம். குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளை நமது குடும்பங்களில், சமூகத்திலிருந்து களைவோம். மாசற்ற மனம் கொண்டு நாம் வாழ்ந்திட வரம் வேண்டி இப்பலியில் இணைவோம்.

**நன்றி: அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 944 314 0660; www.arulvakku.com